## நெல் சந்தைப்படுத்தல் சபை - 2017

---

நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச்சட்டத்தின் 30 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டிற்கான சபையின் கணக்கு அறிக்கை 2018 நொவம்பர் 28 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்தன.

நுிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கைசபையின் தலைவருக்கு 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கண்ககாய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் பெறுபேறாக, நிதிநிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனமாற்றக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் மற்றும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் சீராக்கலைச் செய்வதற்கான அவசியம் காணப்பட்டதா என்பதனை என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெறமுடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) நெல்லை கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியினை திரட்டுவதற்கும், சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்களின் விலையிலும் குறைந்த சந்தை விலைக்கே விற்பனை செய்வதால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்வதற்கும் சபையானது திறைசேரி மற்றும் அரச வங்கிகளிடமிருந்து ஆண்டுதோறும் கடன் பெறவேண்டியிருக்கின்றது. 2009 அம் ஆண்டிலிருந்த 2014 ஆம் ஆண்டு வரை நெல் கொள்வனவுகளுக்கும் மற்றும் தொழிற்பாட்டு செலவினங்களும் 03 அரச வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2017 திசெம்பர் 31 வரை செலுத்தபட வேண்டிய கூட்டுமொத்தத் தொகை ரூபா 17,968.1 மில்லியன் மற்றும் இதற்காக செலுத்தப்பட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 595.15 மில்லியனாக காணப்படுகின்றது. இதன் காரணமாக அரச அல்லது வேறு நிதி நிறுவனங்களிலிடமிருநடது மானிய உதவிகளை பெற்றுக்கொள்ளமல் சபையினை தொடர்ந்து செயற்படுவது தவிர்க்க முடியாதுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய மூன்று வருடங்களுக்கு தேறிய இலாபம் தொடர்பான மதிப்பீடுகளில் 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,396,891,908 நேரெதிர் பெறுமதி மீளாய்வாண்டில் ரூபா 12,548,690,540 நேரெதிரான பெறுமதியாக அதிகரித்த காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் தேறிய நடைமுறை சொத்துக்கள் ரூபா 1,628,570,282 ஆக நேர் எதிர்மறைப் பெறுமதியாக காணப்படுகின்றது. இதனால் சபையினை தொடர்ந்து இயங்குவதில் ஐயப்பாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளன.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i). மீளாய்வாண்டில் ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு ரூபா 3,750,900 ஆக காணப்பட்ட போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றின் தொழிற்பாட்டு நடவடிக்கையின் சீராக்கத்தின் கீழ் ரூபா 12,144,932ஆக காட்டப்பட்டிருந்தன.

(ii). முன்னைய ஆண்டு இலாபத்திற்கு எதிராக சீராக்கம் செய்யப்பட இருந்த ரூபா. 26,007,397 ஆனது மீளாய்வாண்டின் இலாபத்திற்கு எதிராக சீராக்கம் செய்யப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கையில் காட்டப்பட்டிருந்தன.

(iii). மீளாய்வாண்டில் சேமிப்புக் கணக்குக்கான வட்டி ரூபா 425,855 ஆனது காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டுத் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(iv). மீளாய்வாண்டில் தாவரங்கள் ரூபா 62,962,694 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதில் ரூபா 28,525,004 பெறுமதியே கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அத் தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையில் ஆதனம், பொறி இயந்திர உபகரணத்தின் கீழ் காட்டப்படவேண்டியிருந்த போதிலும் ரூபா 34,437,690 ஆன கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையினையும் சேர்த்து ரூபா 62,962,694 என காட்டப்பட்டிருந்தன.

(v). மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்றின் கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா.68,226,432 ஆகவும் கடைகளை நவீனமயமாக்குதல் தொடர்பான ஒதுக்கீடு ரூபா 11,122,645 காட்டப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாட்டிலான தேறிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

(i). இந் நியமத்தின் 73 ஆவது பந்திக்கமைய ஆதனம், பொறி இயந்திர மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்மானம், பெறுமானத்தேய்வு வீதம் தொடர்பான விடயங்கள் நிதிநிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆதனம், பொறி இயந்திர மற்றும் உபகரணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட உபகரணங்கள் மற்றும் பாலங்களின் பெறுமானத்தேய்வு வீதங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii). இந்நியமத்தின் 51 ஆவது பந்திக்கமைய 2016 ஆம் ஆண்டில் நடைமுறையல்லாச் சொத்துகளின் பயன்பாட்ட ஆயுட்காலத்தினை மதிப்பீடு செய்யப்படாததன் விளைவாக 04 சொத்துக்களின் பெறுமதியானது ரூபா 5,343,708 ஆனது முழுமையாக பெறுமானத்தேய்வடைந்துள்ள. அச்சொத்துக்களின் பெறுமதியானது சொத்துக்களின் பெறுமதியினுள் காணப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் சொத்துக்களினை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைகணக்கீட்டுநியமம் 20**

(i). இந்நியமத்தின் 24 மற்றும் 26 ஆம் பந்திக்கமைய சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தினூடாக முறைமை அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தினை கொள்வனவு, நிர்மாணித்தல் மற்றும் வேறு வழிகளில் பெறப்பட்ட நீண்டகால சொத்துக்கள் அரச மானியமாக பெறப்பட்டிருந்தவை உள்ளடக்கப்பட வேண்டியிருந்தன. மீளாய்வாண்டில் நிதிசெயலாற்றல் கூற்றில் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 5,657,842 ஆனது சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii). இந்நியமத்தின் 39 ஆம் பந்திக்கமைய முக்கியமான அரச நடவடிக்கைகளை கணக்கீட்டு நியமங்களுக்கமைய செயற்பட வேண்டியிருந்த போதிலும் இச்செயற்பாட்டு நடவடிக்கைகயில் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 54,385,222 பெறுமதியான சரக்குகள் காணப்படுகின்ற போதிலும் இவற்றுக்கு முறையான அனுமதிகள் பெறப்படாமல் மற்றும் பொருத்தமாக முறையில் இனங்காணமுடியாமையினால் மீளாய்வாண்டு மதிப்பீட்டில் ஆலை உரிமையாளர்களிற்கு செலுத்தப்பட வேண்டியவை நிலுவைகள் இணங்காமல் காணப்படுகின்றன.

(ஆ) நிதிநிலைமைக்கூற்றினை தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் கொடுக்கல் வாங்கல்களை சீராக்கம் செய்வது தொடர்பில் காணப்பட்ட ரூபா 5,936,251,166 பொது நாட்குறிப்பேடுகளுக்கான பதிவுகள் 09 காசுப் புத்தகத்தில் வரவிலும் செலவிலும் பதியப்பட்டிருந்தன. இப் பதிவுகள் தொடர்பில் சரியான விளக்கங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிநிலைமைக்கூற்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற வேலை கணக்குடன் தொடர்புபட்ட குறிப்பு 04 இன் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு முற்பணமாக செலுத்தப்பட்ட தொகை ரூபா 63,620,731 ஆகவும் முற்பணக்கணக்கில் ரூபா 52,452,810 ஆகவும் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட நெல் இருப்பினை சபையானது பௌதீகரீதியாக முறையில் இருப்பு கணப்பீடு மேற்கொள்ளாமல் வருட இறுதியில் இருப்புப் பதிவேட்டில் ரூபா 3,089,833,136 ஆக நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தன. இதனால் நெல் இருப்பின் பெறுமதியினை மதிப்பிட முடியாமலுள்ளது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

(அ) இரண்டு (02) வங்கி கணக்குகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற வங்கிக்கூற்றிக்கும் மற்றும் வங்கி கணக்கு நிலுவைக்கும் இடையில் ரூபா 41,153 வேறுபாடுகள் காணப்படுகின்றன.

(ஆ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமைக்கூற்றின் படி மக்கள் வங்கியின் வங்கிக்கூற்றின் படி மேலதிகபற்று மீதி, பேரேட்டு மற்றும் வங்கிக்கூற்றின் படி 2017 சனவரி 01 ஆம் திகதியில் மீதி ரூபா 138,674,163 மற்றும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி ரூபா 210,670 ஆக வேறுபாடுகள் காணப்பட்டன.

(இ) 2019 யூலை 09 ஆம் திகதிஉணவுத் திணைக்கள ஆணையாளரினால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் படி கடன்கொடுத்தோரின் கீழ் உணவு ஆணையார் திணைக்களத்தினால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 445,851,745 ஆக காட்டப்பட்டிருந்தன. எனினும் அவ்வாறான நிலுவைகள் காணப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் கடன்பட்டோர் மீதியாக ரூபா 4,151,314,979 காணப்படுகின்றது. இவற்றில் 05 வருடங்களுக்கு மேலாக கடன்பட்டோர் நிலுவை ரூபா 560,191,839 ஆகவும் 05 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடன்பட்டோர் நிலுவை ரூபா 1,357,210,051 ஆகவும் 03 வருடத்திற்கும் 01 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடன்பட்டோர் நிலுவை ரூபா 29,312,345 ஆகவும் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியில் கடன்பட்டோர் நிலுவை ரூபா 2,204,600,744 ஆகக் காணப்படுகின்றது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட வேண்டிய நிலுவை ரூபா 7,055,612,598 ஆக காணப்பட்டன. இவற்றில் 04 வருடதிற்கு மேலாக காணப்படுகின்ற நிலுவை ரூபா 4,858,937 ஆகவும் 04 வருடம் தொடக்கம் 03 வருடத்திற்கு இடைப்பட்ட நிலுவைப் பெறுமதியாக ரூபா 276,951,461 ஆகவும் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட நிலுவையாக ரூபா 6,771,725,965 ஆகவும் மற்றும் 01 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவை ரூபா 2,076,235 ஆகவுள்ளது. இந்நிலுவைகளில் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை

ரூபா 6,434,554,538 பெறுமதியானது 2019 யூன் 20ஆம் திகதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவே முடியாதுள்ளது.

| கணக்குவிடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| (அ) இனங்காணப்படாதநெல் கொள்வனவு | 63,980,963 | விரிவான தகவல்கள் மீதிகளை உறுதிப்படுத்தல் |
| (ஆ) கொள்வனவுக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 49,743,530 | |
| (இ) Rice Millersகடனுக்குவிற்பனை | 44,399,804 | |
| (ஈ) காய்ந்துபோவதாலானகிரயம் (Driage) | 92,694,994 | குறித்த விகிதத்தை தீர்மானம் செய்தமைக்கான அங்கீகாரம் |
| (உ)கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனம் | 2,867,190,052 | மீதியை உறுதிப்படுத்தல் |
| (ஊ) லங்காசதொசா | 77,526,708 | |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையின் நிதிப் பெறுபேறு ரூபா 462,105,320 நட்டத்தைக் காட்டியது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 5,894,285,458 ஆக இருந்தபோதும் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் நிதிப் பெறுபேறானது ரூபா 5,432,180,138 நலிவை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,698,947,915 ஆல் அதிகரித்த போதும் விற்பனைகிரயம், நிர்வாகசெலவு மற்றும் நிதிச் செலவு முறையாக ரூபா 6,942,293,834உம், மற்றும் ரூபா 195,631,290 ஆல் அதிகரித்தமையே மேலே கூறப்பட்ட அதிகரிப்புக்கு பிரதானமான காரணியாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை நிதிப்பெறுபேற்றில் குறைவடைந்திருந்தது. 2017 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் ரூபா 5,432,180,138 நிதிப்பெறுபேறு அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானம் என்பவற்றை நிதிப்பெறுபேற்றில் மீண்டும் சீராக்கல் செய்கையில் 2016 ஆம் ஆண்டில் சபையின் ரூபா 5,824,719,237 எதிர்மறைப் பங்களிப்பானது 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 364,810,785 எதிர்மறை பங்களிப்பை வழங்கி 94சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

## 4. செயற்பாட்டுமீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) சபையினால் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பான பட்டியலில் மீளாய்வாண்டிற்கான தகவல்கள் மாத்திரமே உள்ளப்பட்டிருந்தன. ஒவ்வொரு நிலையான சொத்துக்களின் பெறுமதி, கொள்வனவு செய்யப்பட்ட திகதி, ஒவ்வொரு ஆண்டும் பெறப்பட்ட வருமானங்கள் மற்றும் வருடத்திற்கான தேய்மான வீதம் ஆகியவை இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொத்த விற்பனை நிலையங்களினை கணணிமயப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,139,500 பெறுமதியான 23 மடிக்கணணிகள் மற்றும் 21 MS Office மென்பொருட்கள் தொகுப்புக்கள் 21/2 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாது இருப்பாக காணப்பட்டிருந்தன.